[1969 ஆகஸ்ட் 19

கோவை நகரசபை

*37 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை நகரசபையை மாநகராட்சி மன்றமாக ஆக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நகராட்சிகளை மாநகராட்சியாக, கார்ப்பொரேஷனாக மாற்றுவதற்குத் தேவைப்படுகின்ற நிலை என்ன என்பதை அரசு அறிவிக்குமா ? இரண்டாம் நிலை நகராட்சிகளை முதல் நிலை நகராட்சிகளாக மாற்ற தேவைப்படும் நிலைகளை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி, கோவை நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா என்பது. உறுப்பினர் அவர்கள் அண்டையிலிருக்கிற தஞ்சை, திருச்சி நகரங்களைப்பற்றிக் கேட்காமல், அக்கறை காட்டி, கோவை நகராட்சியைப்பற்றிக் கேட்டிருப்பதில் நண்பர் திரு. கிட்டப்பாவுக்கு உள்ள ஆர்வத்தையே இது காட்டுகிறது. நகராட்சி மாநகராட்சியாக உயர்த்த அதனுடைய பொருளாதாரம், அவசியம், செய்ய வேண்டிய பணிகள் மற்றவற்றைப் பொறுத்து விதிமுறைகளை ஆராய்ந்து மாற்றலாம். வெறும் மக்கள் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்வது இல்லை. அதனுடைய நிர்வாக அவசியம், மக்களுக்கு அதன்மூலம் நன்மை கிடைக்குமா என்பதையும், மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளையும் குறித்து பரிசிலனை செய்த பிறகே மாற்ற முடியும். மேலும் பெரிய நகராட்சிகளிலேகூட கழிவு நீர்த் திட்டம், குடிநீர்த்திட்டம் முதலியவை நிறைவேற்றப்படாமல் இருக்கும் இந்நிலையில், மாநகராட்சியாக மாற்றுவதன்மூலம் இப்போது புதிய பலன் எதுவும் அந்தப் பகுதிக்குக் கிடைக்காது என்பது அரசாங்கத்தின் கருத்தாகும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மக்கள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து நகராட்சி மன்றத்தை மாநகராட்சி மன்றமாக மாற்றுவது நன்மை அளிக்காது என்று சொன்னார்கள். கோவை நகரை எடுத்துக் கொண்டால் சிங்கநல்லூர் போன்ற பல பகுதிகள் சேர்ந்து விரிந்திருக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள், இவை எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு மாநகராட்சியாக மாறினால் அவர்கள் அதிகப்படியான பஞ்சப்படி போன்ற வருவாயைப் பெற வாய்ப்பு ஏற்படும். கோவை நகரமும் நன்மை அடையும். இனிமேலாவது அதற்கு முயற்சி எடுப்பார்களா ?

REPORTING SECTION

1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கும் பஞ்சப்படி போன்ற அலவன்சை மட்டும் கருதிச் செய்தால் அங்குள்ள மக்களுக்கு இதர வசதிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்கும். அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை. அந்த அந்தப் பகுதிகளுக்கு நன்மை தரக் கூடிய தேவையான திட்டங்கள் நிதிநிலை இடம் கொடுக்கிற வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. வி. எஸ். எஸ். மணி : சென்னை நகரத்திற்கு அடுத்த படியாக இருக்கக் கூடிய நகரம் மதுரை. மதுரை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றும் உத்தேசம் உண்டா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கடந்த காலத்திலேயே ரத்தினசபாபதி குழுவினர் நகராட்சி மன்றங்கள் எதையும் மா நகராட்சி மன்றமாக மாற்றத் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தையே இப்போதுள்ள அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

'லாய்ட்ஸ் எஸ்டேட்'டுக்கு நீர் விநியோகம்

* 29 வினு.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை லாய்ட்ஸ் ரோட்டிலுள்ள வீட்டு வசதி வாரி யத்தைச் சேர்ந்த குடியிருப்பில் தண்ணீர் சரியாக கொடுக்கப்பட வில்லை என்ற புகார் ஏதேனும் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களிடமிருந்து வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) உறுப்பினர் லாய்ட்ஸ் எஸ்டேட்டில் உள்ள தமது அங்கனத்தில் (Flat) நீர்ப்பற்றுக்குறை இருப்பதாகத் தொலைபேசி மூலம் மாநில வீட்டு வசதி வாரியத்திற்குப் புகார் செய்தார்.

(இ) மாநில வீட்டு வசதி வாரியம் இது குறித்து மாநகராட்சி யுடன் கலந்து பேசியது. இப்பகுதிக்கு நீர் வழங்குவதை மேம்படுத்தும் பொருட்டு, நீர் வழங்கு பெருங்குழாய்களைக் கீழிறக்கி, மட்டப்படுத்தும் வேலையை மாநகராட்சி மேற்கொண் டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே குடியிருப்பவர்கள் எல்லாம் சர்க்கார் ஊழியர்களாக இருக்கிற காரணத்தினால் தற்போது கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு மட்டும் சமாளிக்க முடியாத நிலையில் சிரமப்படுகிறார் கள். வீட்டு வசதி வாரியம் கீழே குழாய்கள் அமைத்து தண் ணீர் கிடைக்க வசதி செய்தாலும் முதல் மாடி, இரண்டாவது